செ.வெ.எண்: 29/ஆகஸ்ட்　　　　　　　　　　　　　　　　　　நாள்: 15.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்
# மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற 71-வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் காவல்துறை ஆயுதப்படை மைதானத்தில் இன்று (15.08.2017) மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சுதந்திர தினவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, தேசத்தின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகளைக் கௌரவித்தார்.

பின்னர், மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய 32 காவல்துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த 80 அலுவலர்கள் என மொத்தம் 112 அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். மேலும், பல்வேறு அரசு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் 223 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 14 இலட்சத்து 85 ஆயிரத்து 647 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதன் பிறகு, பரமக்குடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, இராமநாதபுரம் சேதுபதி நடுநிலைப் பள்ளி, இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராமநாதபுரம் அரசு இசைப்பள்ளி ஜவஹர் சிறுவர் மன்றம், தேவிபட்டிணம் கிருஷ்ணா இன்டர்நேஷனல் பள்ளி, புகாரியா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவியர்கள் பங்கு பெற்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஓம்பிரகாஷ் மீனா ,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்.திரு.எஸ்.எஸ்.தனபதி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பேபி, இணை இயக்குநர்கள் (வேளாண்மைத்துறை) திரு.ஆர்.அரிவாசன், (கால்நடை பராமரிப்புத்துறை) திரு.தி.மோகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திரு.முருகானந்தம், முதன்மைக் கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி, தனித்துணை ஆட்சியர்கள் திரு.பாலசுப்பிரமணியன், உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**